**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.146/2025</u>**

ம.சா.3 வசந்தகுமார் த/பெ சங்கர் நாள் : 05.08.2026

**<u>2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் விவசாயம் செய்து அதை வியாபாரம் செய்து வருகிறேன். மனுதாரர்கள் எப்படி பழக்கம் என்றால் வியாபாரம் செய்ததில் பழக்கம். எத்தனை வருடங்கள் பழக்கம் என்றால் தெரிந்தவர்கள் தான். அவர்கள் குமரன் நகரை சேர்ந்தவர்கள். இறந்தவரின் வயது 56 என்று தோராயமாக கூறுகிறேன். எந்த ஆவணத்தை பார்த்து கூறவில்லை . நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை ஏதும் வரவில்லை. 25.10.2018 மாலை 4.30 மணியளவில் புதுபூங்குளம் கிராமத்தில் ஆகாஷ் பள்ளி வாகனம் TN 23 BY 1488 என்ற வாகனம் பக்கவாட்டில் மோதி விபத்து ஏற்பட்டது. மோதியவர் யார் என்று விசாரித்த போது அவர் பெயர் பொம்மிகுப்பத்தை சேர்ந்த கோவிந்தராஜ் என்றும், அவரின் அப்பா பெயர் கண்ணுபையன் என்று தெரிந்து கொண்டேன். யாரிடம் விசாரித்து பெயர் விலாசத்தை தெரிந்து கொண்டேன் என்றால் பதில் இல்லை. இறந்த மகேந்திரன் தன் மீது மோதிய பள்ளி வாகனத்தின் ஓட்டுநர் பெயரை புகாரில் குறிப்பிட்டுள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை. TVS XL இருசக்கர வாகனத்தை மகேந்திரன் ஓட்டி சென்றார். அதனை ஓட்ட ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் தெரியவில்லை. அந்த வாகனம் காப்பீடு செய்யப்பட்டிருந்ததா என்றால் தெரியல்ல. தலைக்கவசம் அணியாததால் தான் தலையில் அடிப்பட்டு இறந்துவிட்டார் என்றால் தலைக்கவசம் அணிந்திருந்தார். பின்பு எப்படி தலையில் காயங்கள் ஏற்பட்டது என்றால் தலைக்கவசம் விழுந்திருக்கலாம். எனக்கு முன்னால் தான் இருசக்கர வாகனத்தின் சென்று கொண்டிருந்தார் அதை நான் பார்க்கவில்லையா என்றால் பார்த்தேன். விபத்து ஏற்பட்டவுடன் சுயநினைவுடன் தான் இருந்தார் என்றால் சரிதான். அடிப்பட்டவர் அரை மணி நேரம் அங்கிருந்தார். அதன் பின்பு நான் ஆட்டோவில் ஏற்றி அனுப்பினேன். யார் புகார் கொடுத்தது என்று தெரியவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள். இன்றுவரை போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும், சம்பவ இடத்தில் நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், மனுதாரர்களுக்கு

தெரிந்தவர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.